# வேளாண்மை – உழவர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 5

## அறிவிப்புகள்
## 2021 – 2022


**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

# வேளாண்மை – உழவர் நலத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை – உழவர் நலத் துறையின் சார்பில், **2021–2022** ஆம் ஆண்டில் ரூபாய் **87** கோடியே **31** இலட்சம் மதிப்பீட்டில் **25** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

## 1. வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் (கீழ்வேளூர்) சிவகங்கை (செட்டிநாடு) ஆகிய மூன்று மாவட்டங்களில் ரூ.30 கோடி மதிப்பில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்கப்படும்.

தற்போது, வேளாண் கல்வி மற்றும் வேளாண் ஆராய்ச்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரியில் புதியதாக அரசுத் தோட்டக்கலைக் கல்லூரி துவங்க அறிவிக்கப்பட்டது. வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, 2021–2022 ஆம் ஆண்டில், கரூர்மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்.

**2. ஆதிதிராவிட பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து மின்மோட்டாருடன் நுண்ணீர்ப் பாசனவசதி அமைத்துத் தருவதற்காக ரூ.12 கோடி செலவிடப்படும்.**

அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக, தமிழக வரலாற்றில் முதன் முறையாக 2021–2022 ஆம் ஆண்டில் நிலத்தடிநீர் பாதுகாப்பான குறுவட்டங்களில் ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து, மின்வசதியுடன், மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர்ப் பாசனவசதிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும். இதற்காக 12 கோடி ரூபாய் நிதி செலவிடப்படும்.

**3. தரமான விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கும், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த சேவைகளை ஒருங்கே விவசாயிகளுக்கு வழங்கிடவும், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், வல்லம், திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர், தருமபுரி மாவட்டத்தில் அரூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும்.**

தரமான விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கும், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் தொடர்பான சேவைகளை ஒருங்கே விவசாயிகளுக்கு வழங்கிடுவதிலும், வட்டார அளவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் மிகவும் தேவை என்பதால், 2021–2022 ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், வல்லம், திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர், தருமபுரி மாவட்டத்தில் அரூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும்.

**4. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை சந்தைப்படுத்த, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூபாய் எட்டு கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும்.**

தற்போது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பல்வேறு வேளாண் பொருட்களையும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் உற்பத்தி செய்கின்றனர். நல்லதரத்துடன், உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் நுகர்வோரை ஈர்க்கும் வகையில் சிப்பம் கட்டுதல் (Packing) முறையை கடைபிடிக்காமலும் தனிமுத்திரை (Branding) செய்யப்படாமலும், தகுந்த தரச்சான்றுகள் பெறப்படாமலும் விற்பனை செய்யப்படுவதால் தனியார் நிறுவனபொருட்களுடன் போட்டி போட இயலாத நிலை உள்ளது.

எனவே, **2021–2022** ஆம் ஆண்டில் தரமான சிப்பம் கட்டுதல் (Packing) முறையை பொருட்களுக்கேற்றவாறு வடிவமைத்து,

அனைவரையும் கவரக்கூடிய Packing–களில் சந்தைப்படுத்தப்படும். பொதுவான தனிமுத்திரையில் (Brand) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் அனைத்து விளைபொருட்களையும் நேரடியாக நுகர்வோர் தேர்ந்தெடுத்து வாங்கிச் செல்லும் வகையில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் முதற்கட்டமாக **50** சிறப்பு அங்காடிகள் ரூ.**8** கோடி செலவில் சுமார் **5000** உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகள் பயனடையும் வகையில் அமைக்கப்படும்.

**5. நெல் உற்பத்தியை உயர்த்த 25 ஆயிரம் ஏக்கரில் துத்தநாக சல்பேட்டும், ஜிப்சமும் 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டம் ரூ.3 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.**

நெல் பயிரின் வளர்ச்சிக்கும், தரமான தானிய மகசூலுக்கும் துத்தநாகமும், ஜிப்சமும் இன்றியமையாத சத்துக்களாகும். இத்தகைய சத்துக்களின் குறைபாடு ஏற்பட்டால் நெல் பயிரின் வளர்ச்சி குன்றி, தூர்கள் குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். எனவே, நெல் நடவிற்கு முன் அடிஉரமாக ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட்டும் 200 கிலோ ஜிப்சமும் இடுவதன் மூலம் இக்குறைபாட்டினை முழுமையாக நீக்கலாம். எனவே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல்லில் அதிக மகசூல் எடுக்க வேண்டும் என்பதற்காக, 2021–2022 ஆம் ஆண்டில் 25,000 ஏக்கரில் துத்தநாக சல்பேட்டும், 25,000 ஏக்கரில் ஜிப்சமும், 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டத்திற்காக மாநில அரசு மூன்று கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கும்.

**6. வேளாண் விளைபொருட்களை சேமித்து வைக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில், திருப்பூர் மாவட்டம் பூளவாடி, புதுக்கோட்டை மாவட்டம் சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி, ஈரோடு மாவட்டம் பர்கூர் ஆகிய இடங்களில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக்கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.**

அறுவடைக்குப்பின் சேதமில்லாமல் வேளாண் விளைபொருட்களை சேமித்து, நல்லவிலை கிடைக்கும் போது சந்தைப்படுத்துவதில் கிடங்குகள் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன. எனவே, 2021–2022 ஆம் ஆண்டில், திருப்பூர், புதுக்கோட்டை, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில், திருப்பூர் மாவட்டம் பூளவாடி, புதுக்கோட்டை மாவட்டம் சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி, ஈரோடு மாவட்டம் பர்கூர் ஆகிய இடங்களில் தலா 250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக்கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

**7. தோட்டக்கலைப் பணிகளை எளிதாக்கும் கருவிகள், உபகரணங்கள் வாங்குவதற்கென 8,654 விவசாயிகளுக்கு 50 சதவிகித பின்னேற்பு மானியமாக ரூ.2.65 கோடி வழங்கப்படும்.**

தினசரி விவசாயப் பணிகளை எளிமையான முறையில் குறைந்த நேரத்தில் மேற்கொள்ள கவாத்து கத்திரி, அறுவடை மேற்கொள்ள அலுமினிய ஏணி, விளைபொருளைச் சேதமின்றி அறுவடை செய்ய வலைக்கருவி, அறுவடையான விளைபொருட்களை சேகரித்து பாதுகாப்பான முறையில் சந்தைக்கு எடுத்துச் செல்ல நெகிழிக்கூடைகள் மற்றும் மலர்களை அதிகாலை நேரத்தில் பறிக்க முகப்பு விளக்குகள் போன்ற தோட்டக்கலைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக 2021–2022 ஆம் ஆண்டில் 8,654 விவசாயிகளுக்கு 50 சதவிகித பின்னேற்பு மானியமாக ரூ.2.65 கோடி வழங்கப்படும்.

## 8. நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.2 கோடி நிதியில் அமைக்கப்படும்.

கடலும் கடல் சார்ந்த இடமுமான நாகப்பட்டினம் மாவட்ட மக்களின் வாழ்வியல் சூழல், வாழ்க்கைமுறை, தாவரவளம் (மரம், செடி, கொடிகள் மலர்கள்) பழங்கள், உணவு, கலைபண்பாடு, பறை (இசை), யாழ் ஆகியவற்றை பறைசாற்றும் வகையில், **2021–2022** ஆம் ஆண்டில் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா, **3.06** எக்டரில் ரூ.**2** கோடி நிதியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். இது இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் செயல்படும்.

**9. விவசாயிகளைத் தொழில் முனைவோர்களாக மாற்ற 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகளுக்கு ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் வர்த்தகத்திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.**

விவசாயிகளை வர்த்தகராக்கும் நோக்கத்தில், உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகளை மேம்படுத்துவதற்கு மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கேற்ப திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே, 2021–2022 ஆம் ஆண்டில் விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்புக் கூட்டுதல், வணிக திட்டமிடல், சந்தைப்படுத்துதல், மின்னணுதளம், வணிக செயல்பாடுகள் போன்ற இனங்களில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களுக்கு 10 நாட்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உணவுப் பதப்படுத்துதலுக்கான இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பிற முன்னணி நிறுவனங்கள் மூலம் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயிற்சி வழங்கப்படும்.

ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் 5 நபர்கள் வீதம் வேளாண் விற்பனைத் துறையினால் உருவாக்கப்பட்ட 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் சுமார் 1.60 இலட்சம் விவசாயிகள் பயனடைவர். இப்பயிற்சிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

**10. வேளாண் இயந்திரங்களை கிராமப் பகுதிகளிலேயே பழுதுபார்க்க ஏதுவாக, திருச்சி மாவட்டம், குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இரண்டு வருட வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் துவங்கப்படும்.**

வேளாண் இயந்திரங்கள் தொடர்பான அடிப்படைக் கல்வியினை பரவலாக்கும் வகையில், **2021–2022** ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இரண்டு வருட வேளாண்மைப் பொறியியல் பட்டயப்படிப்பு ஒரு கோடி ரூபாய் நிதியில் துவங்கப்படும். இப்படிப்பில் வருடத்திற்கு **40** மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதன்மூலம், கிராமப்புற மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு உயரும் என்பதுடன், விவசாயிகளின் வேளாண் இயந்திரங்களை அவரவர் பகுதிகளிலேயே பழுதுபார்க்க இயலும்.

**11. பெண் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு அதிக அளவில் இலாபம் ஈட்டவும், தினசரி வருமானம் பெற்றிடவும் ஏதுவாக காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட 100 மகளிருக்கு ஒரு கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.**

அதிகரித்து வரும் காளான் தேவையைப் பூர்த்தி செய்திடவும், பெண் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு அதிக அளவில் இலாபம் ஈட்டவும், தினசரி வருமானம் பெற்றிடவும் ஏதுவாக 2021–2022 ஆம் ஆண்டில் 100 பெண் விவசாயிகளுக்கு, ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில், குடிசைத் தொழிலாக குறைந்த பரப்பிலான காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட மானியம் வழங்க மகளிர் திட்டத்துடன் இணைந்து ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

**12. நிலமில்லாத 4,077 விவசாயத் தொழிலாளர்களுக்கு, ரூ.3.46 கோடி செலவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலைத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும்.**

நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில், 2021–2022 ஆம் ஆண்டில் 1,077 நபர்களுக்கு ஆறு மாத கால உறைவிட தோட்டத் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி ரூ.1.77 கோடி நிதியிலும், 3,000 நபர்களுக்கு, பூங்கொத்து, பூ அலங்காரம் செய்தல், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல், தேனீ வளர்ப்பு குறித்த 30 நாள் பயிற்சிகள் ரூ.1.69 கோடி நிதியிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்கப்படும். இப்பயிற்சியில் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**13. இயற்கை வேளாண்மையை நோக்கிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக 25 உழவர் சந்தைகளில் விளைபொருட்களில் உள்ள நஞ்சின் அளவைக் கண்டறியும் கருவிகள் ரூ.88 இலட்சம் செலவில் நிறுவப்படும்.**

இயற்கை விவசாயத்தை முன்னிலைப் படுத்துவதற்கு இயற்கையை நோக்கி நாம் பயணிப்பது காலத்தின் கட்டாயமாகும். “பார்ப்பது நம்புவதற்கு சமம்” என்ற சொல்லாடலின்படி, விவசாயிகளிடையே தாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் வேதிப்பொருட்கள் விளைபொருட்களில் தங்கிவிடுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2021–2022 ஆம் ஆண்டில் விளைபொருட்களில் உள்ள நஞ்சின் அளவைக் கண்டறியும் கருவிகள் 25 உழவர்சந்தைகளில் ரூ.88 இலட்சம் செலவில் நிறுவப்படும். இத்திட்டத்தின் மூலம் உழவர்சந்தைக்கு வரும் ஒரு இலட்சம் விவசாயிகளும் நுகர்வோர்களும் பயனடைவர்.

**14. தருமபுரி, கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களில் நான்கு அங்கக வேளாண்மை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.1.29 கோடி மதிப்பில் உருவாக்கப்படும்.**

“நஞ்சில்லா விவசாயமே நாட்டின் தற்போதைய தேவை“. இயற்கை வேளாண்மை முறைகளை மட்டுமே கடைபிடித்து சாகுபடி செய்ய தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் தருமபுரி, கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நான்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அங்கக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்கப்படும். இத்திட்டம் ரூ.1.29 கோடி செலவில், செயல்படுத்தப்படும். அங்கக வேளாண்மை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 2,000 விவசாயிகள் பயன் அடைவர்.

## 15. தரிசு நில தோட்டக்கலை சாகுபடியில் சிறந்த விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் வழங்கப்படும்.

தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2021–2022 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிகளை தேர்வு செய்து சான்றிதழுடன் முதலாம் பரிசாக ரூ.15,000/–ம், இரண்டாம் பரிசாக ரூ.10,000/–ம், மூன்றாம் பரிசாக ரூ.5,000/–ம் வழங்கிட ஆண்டிற்கு ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. வெற்றிலை சாகுபடியினை ஊக்குவிக்க எக்டருக்கு ரூ.10,000/- வீதம் 100 எக்டருக்கு ரூ.10 இலட்சம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் திருச்சி, நாமக்கல், கரூர், தஞ்சாவூர், மதுரை போன்ற மாவட்டங்களில் அதிகமான பரப்பில் வெற்றிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை உள்ளடக்கி, உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய வெற்றிலையை சாகுபடி செய்துவரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மையை மேற்கொள்ளத் தேவையான இடுபொருட்கள் வாங்க 2021-2022 ஆம் ஆண்டில் எக்டருக்கு ரூ.10,000/- வீதம் 100 எக்டருக்கு ரூ.10 இலட்சம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

**17. பூச்சிக்கொல்லி மருந்து உரிமம் வழங்குதல், பூச்சிக்கொல்லி மருந்து சட்ட மேலாண்மை முறைகளை விரைவுபடுத்துவதற்கு, 2021–2022 ஆம் ஆண்டு முதல் இணையதளம் மூலம் செயல்படும் வகையில் "பெமிஸ் (PEMIS)" மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும்.**

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் பெறுவதை எளிதாக்கிடும் பொருட்டு, பூச்சிக்கொல்லி மருந்து உரிமம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து சட்ட மேலாண்மை முறைகளை 2021–22 ஆம் ஆண்டு முதல் இணையதளம் மூலம் மேற்கொள்ள "பெமிஸ் (PEMIS)" என்னும் மென்பொருள் உருவாக்கப்படும்.

இதன் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் இருப்பு வைத்திருப்போர்களுக்குத் தேவையான உரிமங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து எளிதாகப் பெற்றிட வழிவகை செய்யப்படும். இதன்மூலம், தரமான பூச்சிக்கொல்லிகள் விவசாயிகளுக்குக்

கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் பூச்சிமருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பூச்சிக்கொல்லி மாதிரிகள் இணையதளம் (ஆன்லைன்) மூலம் கண்காணிக்கப்பட்டு, தரமற்ற மாதிரிகளின் மீது சட்ட விதிகளின் படி நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்.

இந்த பெமிஸ் (PEMIS) மென்பொருளானது வேளாண்மைத் துறையின் மூலம் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு தொழில் முனைவோர் வழிகாட்டு மையத்துடன் (TN Guidance Bureau) ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

## 18. திருப்பூர் மாவட்டத்தில் புதிய விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்படும்

திருப்பூர் மாவட்டத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை சார்பில், 2021–2022 ஆம் ஆண்டில் புதிதாக விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்படும். இதற்கென, நடப்பாண்டில் ரூ.23.50 லட்சம் நிதி செலவிடப்படும். தொழில் நுட்ப மற்றும் இதர பணியாளர்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டு இந்த ஆய்வகம் செயல்படுத்தப்படும்.

## 19. விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் தலைமையிடம் கோயம்புத்தூரில் இருந்து சென்னைக்கு மாற்றப்படும்.

வேளாண்மை, தோட்டக்கலைத்துறைகளின் தலைமை அலுவலகங்கள் சென்னையில் இயங்குவதாலும், விதைச்சான்று, விதை ஆய்வு, அங்ககச் சான்று உள்ளிட்ட பல்வேறு முக்கியப்பணிகளை மாநில அளவில் இதரத் துறைகளுடன் இணைத்து ஆய்விட வேண்டியுள்ளதாலும், நிர்வாக நலன் கருதி, **2021–2022** ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் இயங்கி வரும் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் தலைமை அலுவலகம், மாநிலத்தின் தலைநகரான சென்னைக்கு மாற்றப்படும். இதற்கென **ரூ.50** இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

**20. நானோ தொடர்பான ஆராய்ச்சியை பலப்படுத்துவதற்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், நானோ தொழில்நுட்பத் துறையானது, இரண்டு கோடி ரூபாய் நிதியில் நானோ வேளாண்மை தொழில்நுட்ப மையமாக மேம்படுத்தப்படும்**

நானோ தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும், விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் நானோ தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதிலும் வழிகாட்டியாக விளங்கி வரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், நானோ தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சியை பலப்படுத்தவும், நானோ உத்திகளை தொழில்நுட்பமாக மாற்றிடவும், **2021–2022** ஆம் ஆண்டில் நானோ தொழில்நுட்பத் துறையானது, இரண்டு கோடி ரூபாய் நிதியில் நானோ வேளாண்மை தொழில்நுட்ப மையமாக மேம்படுத்தப்படும்.

## 21. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை உற்பத்தித் திறனை அதிகரிக்க உட்கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் புதிய இரகவிதை உற்பத்தியினை உயர்த்துவதற்காக, **2021–2022** ஆம் ஆண்டில் பவானிசாகர் மற்றும் வைகை அணையில் இயங்கிவரும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## 22. தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம் இயற்கை வளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர்குறித்த தகவல்கள் ரூ.2 கோடி மதிப்பில் கணினிமயமாக்கப்படும்.

மாறிவரும் அறிவியல் முன்னேற்றங்களுக்கு ஏற்ப செயற்கை நுண்ணறிவு, தொலையுணர்வு, டிரோன் மற்றும் ரோபோ தொழில்நுட்பங்களை உள்ளடக்கி பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்களை கணினி மயமாக்கிட, **2021–2022** ஆம் ஆண்டில் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் இரண்டு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதன் மூலம் நீர், மண், பயிர் மேலாண்மை, பூச்சி, நோய் குறித்த துல்லியமான தகவல்கள் விரைவாக விவசாயிகளுக்கு சென்றடையும்.

**23. விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் ரூ.1.20 கோடி மதிப்பில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.**

வேளாண்மை, தோட்டக்கலையில் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எளிதாகக் கொண்டு செல்லும் வகையில், 2021–2022 ஆம்ஆண்டில், தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

**24. வேளாண் தகவல்கள் விரைவில் விவசாயிகளுக்கு சென்றடைவதற்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் இணையதளம் மேம்படுத்தப்படுவதுடன் வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய வீடியோ பாடங்கள் சமூக ஊடகங்கள் மூலம் ரூ.40 இலட்சம் நிதியில் வெளியிடப்படும்.**

தமிழ்நாட்டு வேளாண் பெருமக்கள் மற்றும் அலுவலர்களின் வசதிக்காக, **2021–2022** ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் இணையதளம் (TNAU Agritech Portal) **15** லட்சம் ரூபாய் நிதியில் மேம்படுத்தப்படுவதுடன், கல்வி ஊடக மையம் (Educational Media Centre) மூலமாக வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய வீடியோ பாடங்கள் ரூ.**25** லட்சம் நிதியில் தயாரிக்கப்பட்டு, சமூக ஊடகங்கள் (YouTube) மூலமாக வெளியிடப்படும்.

**25. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் விதைகள் உள்ளிட்ட பல்வேறு இடுபொருட்களை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில் வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றை சாளர விற்பனை மையங்கள் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக உற்பத்தி செய்யப்படும் விதைகள் உள்ளிட்ட பல்வேறு இடுபொருட்களை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில், **2021–2022** ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் **14** வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றை சாளர விற்பனை மையம் (One stop shop) ரூ.**25** லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து, அரசு தோட்டக்கலைப் பூங்காக்களிலும் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படும்.